**கவனிக்க.**- 2007.05.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ), பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1499 - 2007 මැයි 25 වැනි සිකුරාදා - 2007.05.25**

*1499 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 382 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 385 |


*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூன் 01 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மே 18 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள்:**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும்.விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி
(விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "பொலிஸ் கொஸ்தாபல் (விசேட அதிரடிப்படை)" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2007.08.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- *பொலிஸ் கொஸ்தாபல் (விசேட அதிரடிப்படை) பதவி*.- ரூபா 1,66,560 - 7x1,440 - 27x1,800 - ரூபா 2,25,240.

(அ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.

(ஆ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப் படும்.

(இ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவை களுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) *வயதெல்லை :* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள் - பொலிஸ் கொஸ்தாபல்* (விசேட அதிரடிப்படை பதவி).- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஊடக மொழி அடங்கலாக ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங் களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க. பொ. த (சா./த.) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழிநுட்ப பாடத்தில் சித்தியடையாமல், அதே பாடத்தில் செயல் முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கில, சிங்கள பாடங்கள் க. பொ. த (சா./த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க.பொ.த.(சா./த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள் :*

(i) *உயரம் :* 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)
(ii) *மார்பளவு :* 30 அங்குலம் ஆகக்குறைந்தது (மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும் மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ஈ) *பார்வை தொடர்பான தேவை*.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(உ) *பிற தகைமைகள் :*

(அ) விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண் டும். (விவாகரத்து பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

(ஆ) மேற்போந்த அடிப்படைக் கல்வி பௌதீக தகைமைகளுடன் குறிப்பிடப்பட்ட வயதெல்லையை மீறாத வேறு ஏதாவது விளையாட்டுத் துறைகளில் விசேட ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ) இறுதித் தெரிவு சபை முன் தோற்றுவதற்கு முன் விண்ணப்பதாரர் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிக்கும் பரீட்சை, மனோ வலிமைப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எழுத்துப் பரீட்சை வினாப்பத்திரங்கள் இரண்டினைக் கொண்டிருக்கும்.

* வாக்கியங்கள் அமைத்தல் தொடர்பான பரீட்சை (*காலம் :* 45 நிமிடங்கள்).
* பொது அறிவு விவேகம் தொடர்பான பரீட்சை (*காலம் :* 1 மணித்தியாலம்).
* தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனம் பெறுவதற்கு முன் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். பொலிஸ் சேவைக்கு மருத்துவ ரீதியாகப் பொருத்தமற்றவராகக் காணப் படும் விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவர்.

5. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைவுறுத்தும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக்கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ்மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) அடிப்படை பயிற்சிக்காலம் இலங்கை பொலிஸ் கல்லூரியில் ஒரு வருடமும், பிரதேச பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களுமாக அமையும்.

(ஊ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பதவியில் உறுதிப் படுத்தப்படும் வரை பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதி இல்லாமல் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார். எவ்வாறாயினும் 1973, பெப்புருவரி 24 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் 41 ஆம் அறிவித்தலின்படி தவிர்க்க முடியாத மிக முக்கிய காரணங்களின்கீழ் ஆகக்குறைந்தது 2 வருட திருப்திகரமான சேவையின் பின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியுடன் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

(எ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும் சீருடைகள் முதலியவற்றுக்காகவும் செய்த செலவீனங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதியில் ஐந்தாம் அத்தியாயத்தின் நாலாம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர் பொலிஸ் கொஸ்தாபல் (விசேட அதிரடிப்படை) பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ)பொலிஸ் கொஸ்தாபல் (விசேட அதிரடிப்படை) பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஓ) தகுதிகூர் நிலை பொலிஸ் கொஸ்தாபல் (விசேட அதிரடிப்படை) பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

7. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாகப் பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

9. (அ) ஏலவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப் படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 3" அளவு தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ் பிரதியுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

10. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

விக்டர் பெரேரா,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல் பதவி (விசேட அதிரடிப்படை) பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்பு சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
   (ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
   (இ) பால் :-----.
   (ஈ) விண்ணப்பதாரரின் தொழில் :-----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

3. தந்தையின் முழுப்பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
   பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   (இ) நிரந்தர முகவரி :-----.
   (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.
   (ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனில் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.
   (இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-
      (1) விண்ணப்பதாரர் :-----.
      (2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
      (3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
      (4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.)
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

8. உயரம் :- அடி -----. அங்குலம் -----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

10. திருமணம் ஆனவரா? / திருமணமாகாதவரா? :-----.

11. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

   (ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையில் அங்கத்தவரா? :-----.

12. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா ? :-----.

13. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :-
   (அ) -----.
   (ஆ) -----.

14. (அ) இலங்கை பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்தது உண்டா ? (அவ்வாறாயின்) அது தொடர்பான விபரங்களைத் தருக : -----.

   (ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கை பொலிஸில் அல்லது இலங்கை உப சேவை பொலிஸில் சேவை செய்து உள்ளீரா ? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களை தருக :-----.

15. (அ) தற்போது படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

   (ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதில் இருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

16. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையில் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் ;

17. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழ்களை இணைக்கவும்.

18. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

19. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா, அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவிற்கெட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

5-438

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விளையாட்டு மற்றும் பொதுப் பொழுது போக்கு அமைச்சு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடத்தப்படும் விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி - 2007

விளையாட்டு மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய விளையாட்டுத் துறை விஞ்ஞான நிறுவகத்தின் சிங்கள மொழிமூலம் நடத்தப்படும் விளையாட்டுத்துறை தொடர்பான டிப்ளோமாப் பாடநெறியில் சேர்த்துக்கொள்வதற்காக 18-35 வயதிற்கிடைப்பட்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**குறிப்பு**.- (1) தற்போது அரச சேவையில் பணியாற்றுவோருக்கு மேற்குறிப்பிட்ட வயதெல்லை ஏற்புடையதாகாது.

(2) இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கும்போது உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**2. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

2.1 க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் இரு அமர்வுகளில் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். எனினும் சித்தி பெற்றுள்ள ஆறு பாடங்களுள் சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் அல்லது எண்கணிதம் எனும் இரு பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(அ) விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனத்தில் குறைந்தபட்சம் 6 மாத காலப் பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) விளையாட்டு மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அமைச்சில் அல்லது மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ள விளையாட்டு அதிகாரியாக ஒரு வருட காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது பாடசாலை விளையாட்டு ஆசிரியராக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டுத்துறை ஆலோசகராக குறைந்தபட்சம் 5 வருடகால அனுபவத்தைப் பெற்றிருப்பதுடன், விளையாட்டுத் துறையில் விசேட சாதனை புரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். கல்வியியல் கல்லூரியில் உடற் கல்விப் பாடநெறியைப் பூர்த்தி செய்திருந்தாலும் கல்வி அமைச்சின் 5 வருட அனுபவம் கட்டாயமாகும்.

அல்லது

(இ) இராணுவ, கடற்படை அல்லது விமானப்படைப் பயிற்சிப் பாடசாலையொன்றில் விளையாட்டு அல்லது உடற்கல்வி சம்பந்தமாகக் குறைந்தபட்சம் மூன்று மாத காலப் பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) தேசிய விளையாட்டுக் குழு ஒன்றின் அங்கத்தவராக இருந்து சர்வதேச விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி இருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவில் தனிப் போட்டியொன்றில் கலந்து முதலாவது அல்லது இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

குழு அடிப்படையில் நடத்தப்படும் போட்டிகளில் முதலாவது அல்லது இரண்டாவது இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது அந்த விழாவில் மாவட்ட அடிப்படையிலான தனிப்போட்டியொன்றில் முதலாவது அல்லது இரண்டாவது இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது குழுப்போட்டி ஒன்றில் முதலாம் இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது விளையாட்டுக் கழகம் ஒன்றினால் நடத்தப்படும் தேசிய மட்டப்போட்டியொன்றில் முதலாவது அல்லது இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது தேசிய அல்லது பொதுப் பாடசாலை மட்டத்திலான போட்டியொன்றில் முதலாவது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**3. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முறை :**

3.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகள் இதன் கீழ்த் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை 8" x 13 1/2" அளவிலான கடதாசியில் தயாரித்து, தம் சொந்தக் கையெழுத்தினால் பூர்த்திசெய்து 2007.06.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனம், இல. 100/07, சுதந்திர வழி, கொழும்பு 7" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் காகித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "2007 விளையாட்டுத்துறை டிப்ளோமாப் பாடநெறிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

3.3 அரசாங்க உள்ளூராட்சிச் சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அதிகாரிகளால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திணைக்கள அல்லது நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**4. தேர்ந்தெடுக்கும் முறை.**- கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைபெற்றுள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதோடு, அதில் சித்திபெறுவோர் நேர்முகப்பரீட்சை ஒன்றிற்கும், செய்முறைப் பரீட்சையொன்றிற்கும் உட்படுத்தப்பட்ட பின்னர் பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

5. **பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

5.1 இப் பாடத்திட்டமானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாகும் :-

(அ) பயிற்சி பெறுவதற்கான பொது விதிமுறைகள் : (உடல் நிலைமைகள் மற்றும் திறமைகள், தொழில்நுட்ப முறைகள், உபாய முறைகள், பயிற்சி பெறும் முறை, திட்டமிடல், பகுதி மற்றும் பரிசோதனை தொடர்பான விதிமுறைகள்)

(ஆ) குறைந்தபட்சம் 10 விளையாட்டுக்கள் தொடர்பான விதிமுறைகளும் செயன்முறை அறிவும்.

(இ) தடம் மற்றும் களம் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ) தடம் மற்றும் கள மெய்வல்லுனர் விளையாட்டுக்களுக்கு மேலதிகமாக டிப்ளோமாப் பாடநெறியின் போது ஆண்கள் அல்லது பெண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் சமமான அல்லது சமனற்ற வகையில் குறிப்பிட்ட ஒரு விளையாட்டில் புலமை பெறுதல்.

(உ) விளையாட்டுத் துறை மெய்யியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், விளையாட்டுத்துறை நிர்வாகம், விளையாட்டுத்துறை ஒழுங்கமைப்பு மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் பற்றிய கற்கை.

5.2 பாடத்திட்டத்தின் கால எல்லை 12 மாதங்களாகும். (அவசியம் ஏற்படின் காலஎல்லை மாற்றியமைக்கப்படலாம்)

5.3 இப்பாடத்திட்டதிற்கு தெரிவுசெய்யப்படும் வேலையற்ற விண்ணப்பதாரர்கள் ரூபா. 6000 மும் அரச, அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகளில் சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள். ரூபா 10,000 ஐயும் பாடநெறிக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். (இப்பணத்தைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது சேவையில் உள்ளவர்கள் அவர்களின் தாபனங்களின் மூலமாகவோ செலுத்தலாம்.) எக்காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

5.4 பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டுக் கல்லூரியின் சட்டதிட்டங்களுக்கு இசைவாக நடப்பதற்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

5.5 பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவுசெய்பவர்களுக்கு டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.

6. **ஏனைய விதிமுறைகள் :**

6.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சு பணிக்கப்படவில்லை.

6.2 கற்கைநெறியில் சேர்ந்துகொள்பவர் தேசிய விளையாட்டுத் துறை விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டுமென்று அமைச்சு தீர்மானிக்கும் பட்சத்தில் அதற்கு உடன்பட வேண்டும்.

6.3 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அது தொடர்பாக தேசிய விளையாட்டுக் கல்லூரியின் பணிப்பாளரின் சிபார்சின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ். லியனகம,
செயலாளர்.

விளையாட்டு மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அமைச்சு,
இல. 33, ரொரிங்டன் இடம்,
கொழும்பு 7,
2007.05.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டு மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அமைச்சு**

*தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடத்தப்படும் விளையாட்டுத்துறை பற்றிய டிப்ளோமாப் பாடநெறி - 2007*

1. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(iii) அடையாள அட்டை இல. :-----.

2. முகவரி :-----.
(i) தனிப்பட்ட :-----.
(ii) அலுவலக :-----.

3. பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

2007.06.15 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. இலங்கைப் பிரஜையா இல்லையா என்ற விபரம் :-----.
இலங்கைப் பிரஜையாயின் பதிவின் மூலமா ? அல்லது பரம்பரையினாலா ? என்ற விபரம் :-----.

5. (i) ஆண்/பெண் பால் :-----.
(ii) திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

6. நீங்கள் தொழில் செய்பவரா ? இல்லையா என்ற விபரம் :----.
தற்போது வகிக்கும் பதவி :-----.
தொழிலில் சேவைக் காலம் :-----.

7. பெற்றுள்ள கல்வித் தகைமை :-----.

| வருடம் | பரீட்சையின் பெயர் | விடயம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|---|
| | | | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள சான்றிதழ்கள் மற்றும் விசேட சாதனைகள் பற்றி இங்கு குறிப்பிடவும்) :-----.

9. (i) வர்த்தமானி வெளியீட்டில் உள்ளவாறு இப்பாடநெறிக்கு தகுதிபெற பந்தி (2.2 அ, ஆ, இ, ஈ, உ) குறிப்பிட்டவைகளில் தேர்ச்சி பெற்றுள்ளீரா ? :-----.

(ii) குறிப்பிட்ட பந்திகளின் கீழ் தேர்ச்சிபெற்ற விபரங்களைக் குறிப்பிடவும் :-----.

10. வேறு விசேட குறிப்புக்கள் :-----.

11. இப்பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறிக் கட்டண மாக ரூபா 6,000 ஐ அல்லது ரூபா 10,000 ஐச் செலுத்துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம் :-----.

இங்கு மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிமொழி கிறேன். இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்கள் தவறானது அல்லது பிழையானது எனத் தெரியவரும் பட்சத்தில் பாடநெறியைக் கற்கத் தகுதியற்றவராகக் கருதப்பட்டு நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**(அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும்)**

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டுத் துறை விஞ்ஞான நிறுவகம்

இக் ..................................................................................... த்தில் ...................................................... பதவியில் பணியாற்றுகின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................................................... அவர்களது விண்ணப்பப்படிவம் சிபார்சு செய்யப்பட்டு முன்வைக்கப் படுவதுடன், இவ்விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்டுள்ள பாடநெறிக் காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்தில் அவரைப் பணியிலிருந்து விடுவிக்க முடியுமென்பதையும் உறுதிப் படுத்துகின்றேன்.

...................................................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
பதவி முத்திரை
திகதி :-----.

5-401

## இலங்கை பொறியியல் சேவை

வகுப்பு II இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை – 2007

இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு II தரம் II இன் சிவில் பொறிசார்/ மின்/ இரசாயன பொறியியலாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கேற்ப ஏ4 அளவுடைய முழுத்தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2007.06.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் 'இலங்கை பொறியியல் சேவையில் வகுப்பு II தரம் II இன் பதவிகளுக்கான பரீட்சை–2007' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**மு.கு.**– (i) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

**குறிப்பு.**– விண்ணப்பமொன்றோ அல்லது அதனுடன் தொடர்பு டைய கடிதமென்றோ தபாலில் தொலைந்தமை பற்றியோ அல்லது தாமதமானது பற்றியோ செய்யப்படும் முறைப்பாடு கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்புவதற்கு தாமதப்படுத்துவதனால் ஏற்படும் பாதகமான விளைவுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளராவார்.

(ii) அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் அவர்களது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/ 2006 இன்படி இலங்கை பொறியியற் சேவைக்கு எஸ்எல்-1-2006 சம்பள அளவுத் திட்டம் உரித்தாவதுடன் அதற்கு ஏற்புடையதான சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) ரூபா 22,935 – 10 X 645 – 8 X 790 – 1050 – ரூபா 53,555 ஆகும். அதன் பிரகாரம் மேற்படி சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்பச் சம்பள படிநிலையான ரூ. 22,935 (மாதாந்தம்) உங்களுக்கு உரித்தாகும். அச் சம்பள அளவுத்திட்டத்தின் 4 ஆம் சம்பள படி நிலையை அடைவதற்கு முன்னர் முதலாம் வினைத்திறன்காண் தடையும் ஏழாம் படிநிலையை அடைவதற்கு முன்னர் இரண்டாம் வினைத்திறன் காண் தடையும் உண்டு. (முழு தொழிற் தகைமைகள்)

4. இலங்கை பொறியியற் சேவையின் ஏனைய விசேட நிபந்தனைகள் பின் குறிப்பிடப்பட்டுள்ளன :

(i) முழு தொழிற் தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்தி யொருவர் நியமனத் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் ரூபா 26,166 (மாதாந்த) சம்பள படி நிலையில் அமர்த்தப் படுவார்.

(ii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் முதலாம் வினைத்திறமைகாண் தடையைக் கடந்து செல்வதாயின் உரிய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இப் பரீட்சையின் பாடத்திட்டமும், பரீட்சை நடைமுறையும் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்புடையதாக அமையும். முழுத் தொழிற்தகைமைகள் சகிதம் நியமனம் செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் அவ்வாறு முதலாவது

வினைத் திறமைகாண் தடையைக் கடந்து செல்வதற்காக இருக்கும் பரீட்சையைத் தான் நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 வருட காலத்திற்குள் சித்தியெய்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் II ஆம் வினைத்திறமை காண் தடைக்கு மேல் தரம் உயர்த்தப் படுவதற்காக பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதித்துள்ளவாறு முழுத் தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. **பதவி உயர்வுக்கான சந்தர்ப்பங்கள்**.- இலங்கை பொறியியற் சேவையின் வகுப்பு II தரம் II இல் இருந்து வகுப்பு II தரம் I மற்றும் வகுப்பு I இற்குப் பதவி உயர்விற்கான சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பான பொது நியதிகளும் நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதாகும். பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு உரித்துடைய வராவீர். இந்நியமனமானது மூன்று ஆண்டுகளுக்குத் தகுதிகாண் காலத்தை உடையதாக அமையும்.

(ii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் இத்தீவின் விதிக்கப்படும் எப்பகுதியிலாயினும் பணியாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் அந்தந்த அமைச்சுக் களிலும், திணைக்களங்களிலும் மாகாண சபைகளிலுமுள்ள பொறியியல் பயிற்சி நெறிகளில் இருக்கும் வெற்றிடங்களுக் கேற்ப அந்தந்தத் திணைக்களங்களிலும் மாகாண சபைகளிலும் உள்ள வெற்றிட பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

(iv) அரசாங்க சேவையில் நியமனங்களை நிருவகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், 1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆந் திகதிய 509/7 ஆம் இலக்கம் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியிலும் 1989.12.29 ஆந் தேதிய 590/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் 2004.07.22 ஆந் தேதிய 1350/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியல் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களுக்கும் அதற்காக இதன் பிறகு மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைவாக நியமனம் செய்யப்படும்.

7. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- எல்லா விண்ணப்பதாரர் களும் கீழ்வரும் விடயங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு ஏற்றுக்கொள்ள முடியுமான சாட்சிகளை முன்னளித்தல் வேண்டும் :-

(i) நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த உடல் நலம் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் (தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது) இருத்தல் வேண்டும்.

(iii) (அ) இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட உரிய பொறியியல் பாடநெறிக்கான பொறியியல் பட்டமொன்று அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட அதற்குச் சமமான பொறியியல் பட்டமொன்று இருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்திற்காக விண்ணப்பதாரர்களுக்கு தகைமைகளைப் பெற்றுக்கொடுக்கும் விதித்துரைத்த பொறியியல் பாடநெறிகளுக்கு ஏற்புடைய பரீட்சை களில் சித்தியெய்தியிருத்தல்.

அல்லது

(இ) அனுசரணை முறையிலான இணை அங்கத்துவத் திற்காக விண்ணப்பதாரர்களுக்கு தகைமைகளைப் பெற்றுக்கொடுக்கும் உரிய பொறியியற் பாடநெறி களுக்கான ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் நிறுவன சபையினால் அல்லது அதன் பதில் நிறுவன மொன்றிலிருந்து நடாத்தப்படும் பரீட்சையொன்றில் எல்லா பகுதிகளிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றில் விதித்துரைத்த பொறியியல் பாடநெறிக்கான பட்டய அங்கத்துவத்தை அல்லது அதிசிறப்பு அங்கத்துவத் தைப் பெற்றிருத்தல்.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் பெறுபேறுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

8. விண்ணப்பதாரர் பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றையோ எல்லாவற்றையுமோ தேவையேற்படும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும். அச்சாதனங்களின் பிரதிகளை இணைக்க வேண்டிய அவசியமில்லை :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(**மு. கு.**- சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கிய பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பட்டச் சான்றிதழ் அல்லது உயர் கல்விச் சான்றிதழ் ;

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு ;
இவற்றில் ஒன்று கல்விப் பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழில்சார் தகைமை/அல்லது கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களத்தில், தமிழில், ஆங்கிலத்தில் சித்தியெய்திருக்கும் உயர் பரீட்சைகள் தொடர்பான சான்றிதழ்கள்.

9. (i) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(iii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கிய உடன் அது சம்பந்தமாக பத்திரிகையில் அறிவித்தலொன்று வெளியிடப்படும். குறிப்பிட்ட திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் விபரங்களுடன் அது சம்பந்தமாக உடனடியாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்குத் தாமதமின்றி அறிவித்தல் வேண்டும். (தந்தி முகவரி : 'பரீட்சை', கொழும்பு)

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பங்கள் தபாலில் இடப்பட்ட திகதி, பதிவு இலக்கம் மற்றும் திகதி.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்டச் செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ பரீட்சைக் கட்டணத்தை வருமான தலைப்பு 4000-20-3-20-13 க்குச் செலுத்துதல் வேண்டும். மாவட்ட செயலகத்திலிருந்து அல்லது பிரதேச செயலத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. உரிய பரீட்சைக் கட்டளை மேற்கூறப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

11. **பரீட்சைத் திகதி**.- இப்பரீட்சை 2007, செத்தெம்பர் மாதம் அல்லது அதற்கு முன்னர் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

12. இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்காகச் செய்யப்படும் நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகளில் கவனம் ஈர்க்கப்படுகிறது (9 ஆம் இலக்க நிபந்தனையைத் தவிர்ந்த)

13. பரீட்சைக்கான அனுமதி.- (அ) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகள் வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைக் காட்டத்தவறும் பரீட்சார்த்தி யொருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தான் பரீட்சைக்குத் தோற்றும் மண்டபத்திற்குச் செல்லும் முதல் நாளிலேயே அந்த மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட விதிகளின் தொகுதி ஒன்று இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட் டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்றை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

14. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படு கின்றார். இதன் பொருட்டு பின்வரும் சாதனங்களின் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) ;

(ஆ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

15. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தி உரிமை இப்பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக் கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம். ஒரு பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் உண்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

16. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சை மொழி மூலம் -

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைப் பரீட்சையை எம் மொழிமூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) தகைமைப் பரீட்சையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் மூலம் பாடங்களில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் தகைமைப் பரீட்சையில் பெரும்பான்மையான பாடங்களை எந்த மொழியில் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சையை எழுதுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப்பாடத்தை இன்னொரு மொழியிலும் சித்தியெய்தி விசேட பட்டம் பெற்றுள்ள பரீட்சார்த்தியொருவர் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு** (i) :- மேற்போந்த (அ) மற்றும் (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட 'தகைமை பரீட்சை' என்னும் சொற்றொடர் (07) (iii) ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட பரீட்சையைக் குறிக்கும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியால் மட்டுமே விடை எழுதுதல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி ஒருவர் தான் விண்ணப்பத்திற்கொடுத்த பரீட்சை மொழியையோ அல்லது பாடங்களையோ அல்லது அவற்றின் தரங்களையோ மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

17. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.**- பின்வரும் பாடங்களைக் கொண்ட ஓர் எழுத்துப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் இரண்டு வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும் :-

(அ) நுண்ணறிவுப் பரீட்சை- (1 மணித்தியாலம்) 100 புள்ளிகள்
(ஆ) பொது வினாத்தாள்- (1 மணித்தியாலம்) 100 புள்ளிகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரிசோதனை செய்யப்படும் நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

18. **நியமனம் வழங்கும் பொருட்டு தெரிவுசெய்யும் முறை.**- எழுத்து மூலப் பரீட்சையொன்றில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40 புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடியதாகவோ பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின்படி அதிக புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் மேற்குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பல விண்ணப்பதாரர்கள் ஒரே புள்ளிகளைப் பெற்றிருப்பின் அத்தறுவாயில் தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பு அரசாங்க சேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாக இருப்பதுடன் அதுவே இறுதித் தீர்மானமாக இருக்கும்.

19. **பாடத்திட்டங்கள்.**- (அ) *நுண்ணறிவுப் பரீட்சை (1 மணித்தியாலம்).*- பரீட்சார்த்திகளின் தர்க்க ரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் மதிப்பிடும் வகையில் இந்த வினாத்தாள் உருவாக்கப்பட்டுள்ளது. இது பல்தேர்வு வினாத்தாளாக அமையும்.

(ஆ) *பொது அறிவுப் பரீட்சை (1 மணித்தியாலம்).*- பரீட்சார்த்தி வசிக்கும் சேவையாற்றும் சூழல் உட்பட இலங்கையில் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார சூழலும் தேசிய சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த புதிய விடயங்கள், அத்துடன் விஞ்ஞானம், கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பில் அவர் அடைந்துள்ள அறிவினைச் சோதிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும்.

20. நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும், நியமனத் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளையும் அல்லது சகல வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கும், இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிராத விடயங்களைப் பற்றி தீர்மானம் எடுப்பதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கலாநிதி (பொறியியலாளர்) கே. எம். பீ. எஸ். பண்டார,
பொறியியல் சேவைப் பணிப்பாளர்.

பொறியியல் சேவைப் பிரிவு,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2007.05.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும் [ ]

**இலங்கை பொறியியல் சேவை**

*வகுப்பு II தரம் II இன் பொறியியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை-2007*

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்) [ ]

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களை இறுதியாகக் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உதா. SILVA, A.B.
   1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   1.3 முழுப் பெயர் :-----.
   (சிங்களத்தில்/ தமிழில்)
2. நிரந்தர முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   2.1 நிரந்தர முகவரி :-----.
   (சிங்களத்தில்/ தமிழில்)
   2.2 அலுவலக முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   2.3 அனுமதி அட்டைகள் அனுப்ப வேண்டிய முகவரி :----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
3. விண்ணப்பம் செய்யும் பதவி :-

| | |
|---|---|
| 1. சிவில் | |
| 2. எந்திரவியல் | |
| 3. மின்சார பொறியியலாளர் | |
| 4. இரசாயனம் | |

(உரிய கூட்டினுள் சரி 'X' என்னும் புள்ளியை இடவும்)

4.
   4.1 இனத்தொகுதி :-----.
   (1-சிங்களம், 2-தமிழ், 3-இந்திய தமிழ், 4-முஸ்லீம், 5-ஏனையவை) [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   4.2 ஆண் - 0, பெண் - 1 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   4.3 விவாகமானவரா/விவாகமாகாதவரா :
   விவாகமானவர் - 2, விவாகமாகாதவர் - 1 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   4.4 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் : [ | | | | | | | | | ]
   4.5 பிறந்த திகதி :-
   ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]
   4.6 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :-
   வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

5. 5.1 கல்வித் தகைமைகள் :-
(திகதி வகுப்பொன்று இருக்குமாயின் குறித்த வகுப்பு, பாடங்கள் நிறுவனங்களின் பெயர்கள் அடங்கலாக அனைத்து பட்டங்கள் தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் பற்றிய விபரங்களைத் தயவுசெய்து குறிப்பிடவும்)

| பரீட்சை/ பட்டம் | வகுப்பு | ஆண்டு | பாடங்கள் | நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

5.2 தொழில்சார் தகைமைகள் :-----.

6. தற்போது செய்யும் தொழில் மற்றும் ஏற்கனவே வேறு தொழில் ஆற்றி இருந்தால் அது பற்றிய விபரங்கள் (தொழிலில் சேர்ந்த திகதி மற்றும் விலகிய திகதிகளும் அவ்வாறு விலகுவதற்கான காரணங்களையும் குறிப்பிடவும்) :-

6.1 பதவி :-----.
6.2 திணைக்களம்/நிறுவனம் :-----.
6.3 நியமனத் திகதி :-----.
6.4 நிரந்தர/ஓய்வூதியம் உரித்துடைய/ஓய்வூதியம் உரித்தற்ற/ தற்காலிக நிலையிலானதா :-----.
6.5 பதவி நிரந்தரப்பட்டுள்ளதா :-----.
6.6 பதவியின் சம்பள அளவுத் திட்டமும் தற்போறு பெறுகின்ற சம்பளமும் :-----.

7. ஏதேனுமொரு தவறுக்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தால் தவறையும் விதிக்கப்பட்ட தண்டனையையும் குறிப்பிடவும் :-----.

8. பணப் பற்றுச்சீட்டைக் களராதவாறு நன்கு ஒட்டிவிடவும் (பற்றுச் சீட்டின் படப்பிரதியொன்றைத் தன்வசம் வைத்துக்கொள்வது பின்னர் பிரயோசனமாகலாம்.) :-----.

பற்றுச்சீட்டின் இல. :-----.
செலுத்தப்பட்ட அலுவலகம் :-----.
திகதி :-----.

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனும் விபரம் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவந்தால் நான் இப்பதவிக்குத் தகுதி அற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் அத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நஷ்டஈடுகளுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

இப்பரீட்சைக்கு ஏற்புடையதான நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

..............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

*விண்ணப்பதாரர் அரச சேவையைச் சேர்ந்தவராயின்-*
**திணைக்களத் தலைவரின் அறிக்கை**

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................ ஐ (முழுப் பெயர்) தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் என்றும் ........................................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

மேற்படி 2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் பின்வரும் விடயங்கள் திருத்தப்பட வேண்டும் என்றும், அவரின் வேலை மற்றும் நடத்தை ................................................................ என்றும் நான் சான்றுபடுத்துகின்றேன். தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

..................................................................
சான்றுபடுத்தும் அலுவலரின் கையொப்பம்.

சான்றுபடுத்தும் அலுவலரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(அலுவலக முத்திரையை இடவும்)
திகதி :-----.

5-424

---

## கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி

இத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் மேற்கூறப்பட்ட டிப்ளோமாப் பாடநெறி தொடர்பில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **டிப்ளோமா பாடநெறி தொடர்பிலான விபரங்கள் வருமாறு :**

1.1 சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இப்பாடநெறி நடாத்தப்படும்.

1.2 இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு தொழிற்பயிற்சி வேலைத் திட்டமாக அமைவதுடன், இப்பாடநெறியினை வெற்றிகரமாக முடிவுறுத்துவோர்க்கு இத்துறையில் சுய தொழில்வாய்ப்பினைப் பெறக்கூடியதாகவும் அமைந்துள்ளது. எவ்வாறாயினும் இப்பாடநெறியினை முடிவுறுத்துவோர் தொடர்பில் வேலைவாய்ப்பு வழங்க இத்திணைக்களம் கடமைப்பட்டு இல்லை.

1.3 பயிற்சிக் காலத்தின்போது மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும். ஆனால் உணவு வழங்கப்படமாட்டாது.

1.4 சில வேலைகளில் சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் விரிவுரைகள் நடைபெறுவதால் மாணவர்கள் மாதத்திற்கு ஒரு முறையோ வார இறுதி நாட்களில் தமது விடுதிகளில் இருந்து வெளியேற முடியும்.

*2.* **தெரிவுசெய்யும் முறை.**- எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலம் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். எழுத்துமூல பரீட்சை பின்வரும் பாடங்களினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டு வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும் :-

(i) *கால்நடை வளர்ப்பு.*- க. பொ. த. (சா. த.) பரீட்சையின் விவசாய பாடத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள கால்நடை வளர்ப்பு தொடர்பான பகுதிகளில் இருந்து தயாரிக்கப்படும் குறுகிய வினாக்கள் மற்றும் தெரிவுவினாக்கள் என்பன அடங்கும்.

(ii) பொது அறிவு.

(iii) *ஆங்கிலம்.*- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரம்.

*3.* **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

3.1 விண்ணப்பக்காரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பக்காரர் 2007.06.25 ஆந் தேதியன்று 17 வயதிற்குக் குறையாமலும் 25 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (பிறப்பு சான்றிதழின் பிரதியினை இணைக்கவும்.)

3.3.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ; அத்துடன்

3.3.2 க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல், பௌதீகம், உயிரியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். விண்ணப்பங்கள் இத்தேவைப்பாடுகளுடன் இணங்காதவிடத்து அவை நிராகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சையின்போது மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

** க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்றவர்கள் இந்த டிப்ளோமாப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க இயலாது.

3.3.3 ஆங்கில மொழிமூலம் இக்கற்கை நெறியினைத் தொடரவிரும்பும் விண்ணப்பக்காரர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்திபெற்றிருக்க வேண்டும்.

*4.* எவராவது ஒருவர் பிழையான அல்லது பொய்யான தகவல்கள் வழங்கியிருப்பது தெரிவுசெய்ததன் பின்னர் தெரியவரின் அவரது மாணவநிலை முடிவுறுத்தப்படுவதுடன் அவரது பயிற்சி தொடர்பில் அது வரைக்கும் அரசினூடாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் யாவற்றினையும் கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளருக்கு அவர் செலுத்துதல் வேண்டும். செலவுசெய்த தொகையின் அளவினைத் தீர்மானிக்கும் உரிமை கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளருக்கே உரியதாகும்.

*5.* கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2007.06.25 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, "பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இல. 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் தபாலிடல் வேண்டும். விண்ணப்பத்தினைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறிக்கான அனுமதி" எனும் சொற்றொடர் மற்றும் தமது வதிவிட மாவட்டம் என்பன குறிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் தத்தம் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப் பாளர் நாயகம் எனும் பெயருக்கு பேராதனை தபால் பணிமனையில் மாற்றக்கூடியதாக பெறப்பட்ட ரூபா 150 பெறுமதியான காசுக் கட்டளை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*6.* இவ்வறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவையான தகைமை களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் விண்ணப்பக்காரருக்கு அறியக்கொடுக்காமலே நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

எஸ். கே. ஆர். அமரசேகர,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே,
பேராதனை,
2007.05.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்**

*கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி*

1. முழுப் பெயர் :-----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.

3. முகவரி :-----.

4. மாவட்டம் :-----. தேர்தல் தொகுதி :-----.

5. பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

6. 2007.06.25 ஆந் தேதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

7. விண்ணப்பக்காரர் இறுதியாக எழுதிய பரீட்சை :-----.

8. (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் | ஆண்டு | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் | ஆண்டு | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். பிரதிகள் இன்றி வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

9. இறுதியாக சென்ற பாடசாலை அல்லது நிறுவனம் :-----.

10. விண்ணப்பக்காரர் இறுதியாகக் கற்ற பாடசாலை அல்லது நிறுவனம் :-----.

11. பாடசாலையில்/நிறுவனத்தில் இருந்து விலகிய திகதி :-----.

12. கால்நடை வளர்ப்பில் பெற்றுள்ள அனுபவம் :-----.

(சான்றிதழ்களின் பிரதியுடன் இதனை ஆதரவுபடுத்தவும்)

13. விவசாயம், கிராமிய அபிவிருத்தி, ஏனைய சமூக செயற்பாடுகள் விளையாட்டு போன்றவற்றிலான அனுபவம் (பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :-----.

14. விண்ணப்பக்காரர் பாடநெறியினைத் தொடரவிரும்பு மொழி மூலம் :-

சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்

15. உறவுமுறையல்லாத இருவரது பெயர், முகவரி :-

(1) ............................ (2) ............................
............................ ............................
............................ ............................
............................ ............................

எனது அறிவுக்கு எட்டியவரையில் மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிமொழிகின்றேன். எனது தெரிவின் பின்னர் இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழையானது அல்லது பொய்யானது எனக் காணப்படுமிடத்து எனது மாணவர்நிலை முடிவுறுத்தப்படுவதுடன் எனது பயிற்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தையும் நான் செலுத்த வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

.........................................................
விண்ணப்பக்காரரது கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன :-

1. -----.
2. -----.
3. -----.

5-432

---

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

### இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ளூர் தேர்வு அடிப்படையில் அந்தரங்க உதவியாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2007/2008

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச சேவை, உள்ளூராட்சி சேவை, பகுதி அரச நிறுவனங்களான கூட்டுத் தாபனங்கள்/அரச வங்கிகள், வேறு நியதிச் சபைகளிலும் பணியாற்றும் ஆங்கில சுருக்கெழுத்தும் கணனி பிரயோக ஆற்றலும் உடையவர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமை**.- (1) இலங்கையராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் திருமணம் செய்தவராக இருப்பின் அவரது வாழ்க்கைத் துணையும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

(2) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச சேவை, உள்ளூராட்சி சேவை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 55 வயதிற்கு மேற்படாமலும், ஆகக் குறைந்தது 5 வருட கால சேவையை பூர்த்தி செய்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(3) பகுதி அரச நிறுவனங்களான கூட்டுத்தாபனங்கள், அரச வங்கிகள், வேறு நியதிச் சபைகள், தனியார்துறை நிறுவனங்களில் தொழில் புரியும் உத்தியோகத்தர் ஆகக் குறைந்தது 5 வருட ஆங்கில சுருக்கெழுத்தும், கணனிப் பிரயோக ஆற்றலும் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (1) தற்பொழுது இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவையாற்றுவோர் இதற்கு தகுதியற்றவர்.

(2) முன்னர் வெளிநாட்டு இலங்கை தூதரகங்களில் சேவையாற்றி இலங்கைக்கு திரும்பி வந்தவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் இலங்கைக்கு திரும்பி வந்து ஆகக் குறைந்தது 12 மாதங்கள்

பூர்த்தியானவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

3. **தேர்வு முறை :**

3.1 விண்ணப்பதாரர்கள் ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சை யொன்றிற்கு தோற்ற வேண்டும். சுருக்கெழுத்துப் பரீட்சைக்கான வேகம் நிமிடத்துக்கு 80 சொற்களாகும். இப்பரீட்சையில் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளி களைப் பெற்றவர்கள் கணனி ஆற்றல் தொடர்பான பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். எனினும் எழுத்து மூலப் பரீட்சையில் மேற்குறிப்பிட்ட புள்ளிமட்டத்தைப் போதிய பரீட்சார்த்திகள் பெறத் தவறும் பட்சத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்குக்குண்டு.

3.2 பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் புள்ளிகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| (அ) | ஆங்கில சுருக்கெழுத்து | - 100 புள்ளிகள் |
| (ஆ) | கணனித் தகைமை, தரவுப் பகுதி முகாமைத்துவம் உட்பட (ஒரு மணி நேர எழுத்துப் பரீட்சை) | - 50 புள்ளிகள் |
| (இ) | கணனித் தகைமை, தரவுப் பகுதி முகாமைத்துவம் உட்பட (செய்முறைப் பரீட்சை) | - 50 புள்ளிகள் |

3.3 எழுத்துமூலப் பரீட்சையில் திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவோர் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவர். வெளிநாட்டு அமைச்சின் செயலாளரி னால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

4. **பதவிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 (அ) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றின் நியமனத்திற்கு முன் ஆரம்பத்தில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத குறிப்பிட்ட காலத்துக்கு சேவையாற்ற வேண்டும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சேவையாற்றும் காலத்தில் அவரின் நடத்தை திருப்தியற்றதாகக் காணப்பட்டால் அவரது தேர்வு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. அமைச்சின் தேவைக்கேற்ப தெரிவு செய்யப்பட்டவ ரின் அமைச்சின் சேவைக்காலம் மாற்றப்படலாம்.

(ஆ) ஒவ்வொரு தூதுவராலயங்களின் தேவை அடிப் படையிலும், உத்தியோகத்தர்களின் தகைமை, திறமை ஆகியவற்றின் அடிப்படையிலும் (அந்நிய மொழியில் அறிவு ஆகியன) நியமனம் தீர்மானிக் கப்படும். மேற்கூறப்பட்ட நியமனங்களைச் செய்யும் பட்சத்தில் உத்தியோகத்தர்களின் சுய தேவைகளை யும் கஷ்டங்களையும் (பிள்ளைகளின் கல்வி ஆகியன) கவனத்திற்கு எடுக்கப்படவேண்டும் என்ற கடப்பாடு இவ்வமைச்சிற்குக் கிடையாது. மேலும் தெரிவுப் பரீட்சைகளின் திறமை அடிப்படையில் மாத்திரமே நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கடப்பாடு இவ்வமைச்சிற்கு இல்லை.

(இ) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகம் ஒன்றிற்கு நியமிக்கப்பட்டதும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நிர்ணயிக்கும் விதிகள், நிபந்தனைகளுக்கு அமைய வழமையான மூன்று வருடங்களுக்கு சேவையாற்ற வேண்டப் படுவதுடன் அது தொடர்பாக அவருடன் உடன் படிக்கை ஒன்றும் செய்துகொள்ள வேண்டும்.

4.2 கூட்டுத்தாபனங்கள், அரச வங்கிகள், நியதிச் சபைகள் மற்றும் தனியார் துறைகளிலிருந்து தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் 5 வருடங்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய வேண்டும். (ஆரம்பத்தில் 2 வருடங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும் 3 வருடங்கள் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் பணிபுரிதல் வேண்டும்.) எப்படியாயினும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் கடமைபுரியும் கால எல்லை சேவையின் தேவைக்கேற்ப மாற்றமடையலாம். நியமனம் பெறுபவர்கள் 5 வருட கால ஒப்பந்தம் முடிவடைந்ததும் தங்களது பழைய பதவிகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

4.3 அரச சேவையிலிருந்து தெரிவாகுமிடத்து உத்தியோகத்தர் கள் (அரச முகாமை உதவியாளர் சேவை/மாகாண/அரச/ உள்ளூராட்சிச் சேவை) தற்போதைய சம்பள அளவை தொடர்ந்தும் பெறுவார்கள். ஏனையோர் மாதாந்த சம்பளமாக 14,980 ரூபா நிலையான சம்பளமாகப் பெறுவார்கள். அத்துடன் வெளிநாட்டு இலங்கைத் தூதரக மொன்றில் அவர்கள் சேவையாற்றும் பொழுது தற்பொழு துள்ள சட்டதிட்டங்களுக்கமைய உரிய வெளிநாட்டுப்படி கொடுப்பனவு ஒன்றும் செய்யப்படும்.

4.4 தெரிவாகும் ஒரு உத்தியோகத்தர் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றிற்கு நியமனம் பெறும் பொழுது அங்கு செல்வதற்குரிய மற்றும் திரும்பி வருவதற்குரிய பிரயாணச் செலவுகள், தங்குமிட வசதி மற்றும் வேறு கொடுப்பனவுகள் போன்றவற்றை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் நிர்ணயிக்கும் விதத்தில் அரசாங்கம் ஏற்கும். இச் சலுகைகள் அவரது வெளிநாட்டுச் சேவைக்காலத்தில் அவரதும், அவரது வாழக்கைத்துணை மற்றும் இரு பிள்ளைகளுக்கு மட்டுமேயாகும். (அதன் பிரகாரம் தகுதியுள்ள குழந்தைகள் என்பது உத்தியோ கத்தரின் பராமரிப்பின் கீழ் வதியும் 21 வயதிற்குட்பட்ட திருமணமாகாத பிள்ளைகளாகும்).

5. **விண்ணப்பிக்கும் முறை :**

5.1 அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படமாட்டாது. பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களை அறிவித்தலில் காணப்படும், மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்று "ஏ4" அளவுத் தாளில் தயாரித்து தமது திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் விண்ணப்பதாரர் வெளிநாட்டுச் சேவைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் என்பதையும் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் உடனடியாக விண்ணப்ப தாரரை விடுவிக்க முடியும் என்பதையும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும் திணைக்களத் தலைவர் உறுதிசெய்ய வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2007.06.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப் படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் "வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் சுருக் கெழுத்தாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 200. இந்தக் கட்டணத்தை எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்தலாம். இந்தப் பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் பொருத்தமான கூட்டில் ஒட்டப்பட வேண்டும். (பற்றுச்சீட்டின் இலக்கம், அஞ்சல் அலுவலகம், திகதி என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.) எந்தச் சந்தர்ப்பத்திலும் பரீட்சைக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பம் கிடைத்தது பற்றித் தெரிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுதியான விண்ணப்பதாரி கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சைக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்த லொன்று வெளியிடப்படும்.

பாலித ரீ. பி. கொஹொன,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம்",
த. பெ. இல. 583,
கொழும்பு 1,
2007.05.

மாதிரி விண்ணப்பப்படிவம் - I

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

*வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ளூர் தேர்வு அடிப்படையில் அந்தரங்க உதவியாளர்கள் பதவி*

(பந்தி 2 : (II இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்க்கு மட்டும்)

***பகுதி 'அ'***

சுட்டிலக்கம் : [ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-----.
(ii) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :-----.

2. முகவரி :-
(அ) அலுவலகம் :-----.
(ஆ) பிரத்தியேகம் :-----.

3. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

(ii) விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா (என்பன):-----.

5. திருமணமானவராயின் வாழ்க்கைத்துணையின் பெயரும், தேசிய இனமும் :-----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களது பெயர், பிறந்த திகதியும், அவர்களது வயதுகளும் :-----.

7. வாழ்க்கைத்துணை தொழில் புரிபவராயின், தொழில் விபரம் (அரச சேவையாயின் முழுவிபரம் தரவும்) :-----.

8. கல்வி தகைமைகள் (மொழிமூலம் உட்பட) :-----.

9. அரச சேவை/ மாகாணசபைச் சேவை / உள்ளூராட்சி சேவையின் முதல் நியமனத் திகதி :-----.

10. பதவியில் உறுதியாக்கப்பட்ட திகதி :-----.

11. தற்போதைய தரமும் அதில் நியமனம் பெற்ற திகதியும் :-----.

12. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

13. தற்போதைய கடமைகளின் தன்மை :-----.

14. பின்வருவனவற்றில் வேகம் :-
(அ) ஆங்கில சுருக்கெழுத்து :-----.
(ஆ) ஆங்கில தட்டெழுத்து :-----.

15. பின்வருவனவற்றில் தேர்ச்சி :-
(அ) ஆங்கில மொழி :-----.
(ஆ) சிங்களம்/ தமிழ்மொழி :-----.
(இ) கணனி பிரயோக ஆற்றல் :-----.
(ஈ) அந்நிய மொழிகள் :-----.

16. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய தூதரகங்களும் (எவையேனும் இருப்பின்) காலப்பகுதிகளும் :----.

17. வேறு தகைமைகள் :-----.

18. **குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலின் நிபந்தனைகளுக்கமைய பரீட்சைக்கான சரியான கட்டணத்தைச் செலுத்தி அஞ்சல் அலுவலகத்திலிருந்து பெற்ற பற்றுச்சீட்டை விண்ணப்பதாரர் பின்வரும் கூட்டில் ஒட்ட வேண்டும்.

[ ]

(அ) பற்றுச்சீட்டின் இலக்கம் :-----.
(ஆ) தபால் அலுவலகம் :-----.
(இ) திகதி :-----.
(ஈ) தொகை :-----.

19. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.............................ந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலத்திற்கான சகல வருடாந்த சம்பள உயர்ச்சிகளையும் பெற்றுள்ளேன் எனவும் அத்துடன் எத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை (எச்சரிக்கை தவிர்த்து) என்பதையும் இத்தால் உறுதிமொழிகின்றேன். விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

*பகுதி 'ஆ'*

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்)

திரு./ திருமதி/ செல்வி ................................................................ ................................................................... 2007.06.25 ஆந் திகதிக்கு முன்னுள்ள 5 வருட காலப்பகுதிக்கான சகல வருடாந்த சம்பள உயர்ச்சிகளையும் அலுவலக பதிவேடுகளின்படி, பெற்றுள்ளார் எனவும் அவர் அக் காலப்பகுதியில் எத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவில்லை. (எச்சரிக்கை தவிர்த்து) எனவும், அலுவலக பதிவேடுகளிலிருந்து ஆராய்ந்து அறிந்து கொண்டேன். இவ் உத்தியோகத்தர் தெரிவாகும்பட்சத்தில் இவரை தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும் .

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

உறுதிசெய்பவரின் பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

மாதிரி விண்ணப்பப்படிவம் - II

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

*வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ளூர் தேர்வு அடிப்படையில் அந்தரங்க உதவியாளர்கள் பதவி*

(பந்தி 2 : (III இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்க்கு மட்டும்)

*பகுதி 'அ'*

சுட்டிலக்கம் : [ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-----.
   (ii) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :-----.

2. முகவரி :-
   (அ) அலுவலகம் :-----.
   (ஆ) பிரத்தியேகம் :-----.

3. (i) பிறந்த திகதி :-
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
   (ii) விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா (என்பது):-----.

5. திருமணமானவராயின் வாழ்க்கைத்துணையின் பெயரும், தேசிய இனமும் :-----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களது பெயர், பிறந்த திகதியும், அவர்களது வயதுகளும் :-----.

7. வாழ்க்கைத்துணை தொழில் புரிபவராயின், தொழில் விபரம் (அரச சேவையாயின் முழுவிபரம் தரவும்) :-----.

8. கல்வித் தகைமைகள் (மொழிமூலம் உட்பட) :-----.

9. விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து கடந்த ஐந்து வருடங்களுக்குள் சேவையாற்றிய நிறுவனங்களின் பெயர்களும் காலங்களும் (தயவு செய்து சேவைச் சான்றிதழ்களை இணைக்கவும்) :-

| நிறுவனத்தின் பெயர் | பதவி | காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

10. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

11. தற்போதைய கடமைகளின் தன்மை :-----.

12. பின்வருவனவற்றில் வேகம் :-
   (அ) ஆங்கில சுருக்கெழுத்து :-----.
   (ஆ) ஆங்கில தட்டெழுத்து :-----.

13. பின்வருவனவற்றில் தேர்ச்சி :-
   (அ) ஆங்கில மொழி :-----.
   (ஆ) சிங்களம்/தமிழ்மொழி :-----.
   (இ) கணனி பிரயோக ஆற்றல் :-----.
   (ஈ) அந்நிய மொழிகள் :-----.

14. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய தூதரகங்களும் (எவையேனும் இருப்பின்) சேவையாற்றிய காலப்பகுதியும் :----.

15. ஏனைய பிற தகைமைகள் :-----.

16. **குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலின் நிபந்தனைகளுக்கமைய பரீட்சைக்கான சரியான கட்டணத்தைச் செலுத்தி அஞ்சல் அலுவலகத்திலிருந்து பெற்ற பற்றுச் சீட்டை விண்ணப்பதாரர் பின்வரும் கூட்டில் ஒட்ட வேண்டும் :-

[ ]

   (அ) பற்றுச்சீட்டின் இலக்கம் :-----.
   (ஆ) தபால் அலுவலகம் :-----.
   (இ) திகதி :-----.
   (ஈ) தொகை :-----.

17. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் நான் அறிந்த வரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிசெய்கிறேன். நான் வழங்கியிருக்கும் தகவல்கள் உண்மையற்றதென நியமனம் பெற முன்னர் நிரூபிக்கப்படுமாயின் தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையை இழப்பேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்பு நிரூபிக்கப்படுமாயின் நட்டஈடுகள் ஏதும் இன்றி பதவியில் இருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

பகுதி 'ஆ'

**தாபனத் தலைவரின் சான்றிதழ்**

(தாபனத் தலைவரினால் நிரப்பப்பட வேண்டும்)

திரு./ திருமதி/ செல்வி ....................................................................
............................................. என்பவர் ..........................................
இத்தாபனத்தில் ........................................ ஆந் திகதியிலிருந்து சேவை செய்கின்றார் என்றும், சேவையும் ஒழுக்கமும் திருப்திகரமான தென்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எமது அலுவலக பதிவேடுகளின்படி சரியானவை எனவும் விண்ணப்பதாரர் 2007......................... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

இவ் உத்தியோகத்தர் சேவைக்கு தெரிவாகும் பட்சத்தில் இவரின் தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும்.

.......................................................
தாபனத் தலைவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

5-446/ 1

---

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

### இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள வெற்றிடங்களுக்கான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் ஏற்பட்டுள்ள உள்ளூர் அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையினால் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களுக்கு போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படவுள்ளது. பரீட்சைக்கு அரச முகாமை உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமை உதவியாளர் சேவைகளிலிருந்து தகுதிபெறும் விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சையை இலங்கை வெளிவிவகார அமைச்சின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் நடாத்துவார்கள்.

தகைமை.- விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் I அல்லது II அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் I அல்லது II இல் இருப்பவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) சகல விண்ணப்பதாரிகளும் :

(i) விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 55 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் செய்யும் காலப் பகுதிக்கு முன்னைய ஐந்து வருட காலத்தில் அவ்வவ் வருடத்திற்குரிய சம்பள ஏற்றங்களைக் பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்,

(iii) ஒழுக்காற்றுத் தண்டனைகள் எதுவும் பெறாதிருந்த வராக இருத்தல் வேண்டும் (எச்சரிக்கை தவிர)

**குறிப்பு**.- (i) தற்பொழுது இலங்கைத் தூதரகங்களில் பணிபுரிவோர் இதற்குத் தகுதியற்றவராவர்.

(ii) முன் இலங்கைத் தூதரகங்களில் சேவையாற்றியோர் தங்கள் சேவைக்கால முடிவில் திரும்பி வந்து குறைந்தது 2 வருடங்களை இலங்கையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும்போது தகைமை உள்ளாரெனினும் அதன் பின் அரச முகாமை உதவியாளர் வகுப்பு/ தரம் I/ மாகாண சபை அரச முகாமை உதவியாளர் வகுப்பு/ தரம் I ற்கு மேலான ஒரு சேவைக்கு பதவியேற்றம் செய்யப்பட்டாலோ அல்லது வேறொரு சேவைக்கு மாற்றப்பட்டாலோ இலங்கைத் தூதரகங்களுக்கு உள்நாட்டு சேவையால் நிரப்பப்படவுள்ள முகாமை உதவியாளர் சேவைக்கு தகுதியற்றவராவர். அப்படி ஏற்படும் சாத்தியக்கூறுகள் இருப்பின் அது இப்பகுதி (அ) வின் கீழ்

(iv) நிர்வாகம் மற்றும் கணக்கீட்டு அறிவாற்றல் உள்ளவர்க்கும் ஆங்கிலம் மற்றும் வேறு பாஷைகளில் மிகத் திறனாற்றல் உள்ளவர்க்கும் (எழுத்தும் கதைத்தலும்) முன்னுரிமை வழங்கப்படும். வேலை பார்க்கக் கூடியளவு வெளிநாட்டு மொழிகள் தெரிந்திருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்பட்டு இதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. தேர்வு முறை.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலமாக தேர்வுநடைபெறும்.

3.1 எழுத்துமூலப் பரீட்சை.- கீழே தரப்பட்டுள்ள எழுத்து மூலப் பாடங்கள் ஒவ்வொன்றும் தலா 100 புள்ளிகளைக் கொண்டுள்ளன.

| வினாத்தாள் | கால வரை |
|---|---|
| கணக்கீடு தாபனவிதி முறைகளும் | 2 மணித்தியாலங்கள் |
| அலுவலக நடைமுறைகளும் | 2 மணித்தியாலங்கள் |
| ஆங்கிலம் | 2 மணித்தியாலங்கள் |
| பொது அறிவு | 1 மணித்தியாலம் |

**குறிப்பு**.- (i) *கணக்கீடு*.- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப் படும் கணக்கு முறைகள், கணக்கு தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ் வினாத்தாள் கொண்டுள்ளது.

(ii) *தாபன விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும்*.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டுள்ளது.

(iii) *ஆங்கிலம்*.- விண்ணப்பகாரரின் ஆங்கில புரிந்துணர்வு, எழுத்தறிவு தகைமை என்பவற்றைப் பரீட்சிப்பதாக இவ் வினாத்தாள் அமைந்திருக்கும்.

(iv) பொது அறிவு.- இலங்கையின் அரசியல், சமூக சேவைகள், பாரம்பரியங்கள், பொருளாதாரச் சுற்றாடல், சரித்திரம், புவியியல் மற்றும் இன்றைய சர்வதேச நிகழ்வுகள் என்பவற்றை அடக்கிய வினாத்தாளாக அமையும். விண்ணப்பதாரர் எல்லா வினாக்களுக்கும் விடைகள் எழுதும்படி வேண்டப்படுவதுடன் குறுகிய விடைகள் போதுமானதாகும்.

(v) கணனி அறிவாற்றல் ஒரு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

3.2 நேர்முகப் பரீட்சை :-

3.2.1 விண்ணப்பதாரர் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்த புள்ளிகளில் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் பெற வேண்டியதுடன் மொத்தப் புள்ளிகள் 200 அல்லது அதற்கு மேலாக பெறுபவர்களே நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெறுவர். எனினும் போதியளவு விண்ணப்பதாரிகள் மேற்கூறிய புள்ளிகளைப் பெறாதவிடத்து குறைந்த புள்ளிகளைப் பெற்றிருப் போரையும் நேர்முகப் பரீட்சைக்கு வரக்கோரும் உரிமை வெளிவிவகார அமைச்சுச் செயலாளருக்கு உரிமையுடையதாகும்.

3.2.2 நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 என்பது டன் நேர்முகப் பரீட்சையானது வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும்.

4. பதவிக்கமர்த்தும் நியதிகள் :-

4.1 இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் உத்தியோகத்தர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட காலத்திற்கு கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். இச் சேவைக்காலத்தில் அவரது வேலை மற்றும் நல்லொழுக்கம் என்பன சார்பாக அதிருப்தி காணுமிடத்து அவரது தெரிவு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.

4.2 வெளிவிவகார அமைச்சுச் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகள், நிபந்தனைகளுக்கமைய சாதாரணமாக மூன்று வருடங்களே வெளிநாட்டில் சேவையாற்ற முடியும் என்பதுடன் அதற்குரிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும். இக்காலவரை முடிவுற்றதும் உத்தியோகத்தர் திணைக்களத்திற்கு திரும்பி வரவேண்டும். சேவைக்காலம் நீடிக்கப்படமாட்டாது.

4.3 தெரிவாகும் உத்தியோகத்தர்கள் தாங்கள் தற்போது பெறும் நிரந்தர சம்பளத்தைப் பெறுவதுடன் வெளிநாட்டில் சேவை செய்யும் காலத்தில் வெளிநாட்டுக்கான பணிக்கொடுப்பனவு ஒன்றும் பெறுவார்.

4.4 தெரிவான ஒரு உத்தியோகத்தர் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றிற்கு நியமனம் பெறும் பொழுது அங்கு செல்வதற்குரிய மற்றும் திரும்பி வருவதற்குரிய பிரயாணச் செலவுகள், அங்கு தங்குமிடச் செலவுகள், வெளி விவகார அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் வேறு கொடுப்பனவுகள் ஆதியன அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும். இச்சலுகைகள் அவரது வெளி நாட்டுச் சேவைக்காலத்தில் அவரதும், அவரது வாழ்க்கைத் துணை மற்றும் இரு குழந்தைகளுக்கு மட்டுமே ஆகும். (இதன் பிரகாரம் தகுதியுள்ள குழந்தைகள் என்பன, உத்தி யோகத்தரில் தங்கியிருக்கும் 21 வயதிற்குட்பட்ட பிள்ளைகளேயாகும்.)

5. **விண்ணப்பிக்கும் முறை :**

5.1 அச்சுப் பிரதி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வெளி விவகார அமைச்சினால் விநியோகிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்பத்திரம் இவ் அறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஏ 4 அளவிலான கடதாசியில் மூன்று பக்கங்களில் முறையே 1.0 தொடக்கம் 5.0 வரை, 6.0 தொடக்கம் 13.0 வரை மற்றும் மிகுதி 14.0 இல் இருந்து பகுதி 'ஆ' வுடன் சேர்த்து தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் இவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தின் 'ஆ' பிரிவின் பிரகாரம் திணைக்களத் தலைவர்களால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்குத் தகுதியுள்ளவரா என்பதையும், அவர் தேர்வானால் அவரது தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியுமென்ப தையும், விண்ணப்பத்தில் கூறியிருப்பவை உண்மை யானவை என்பதையும் திணைக்களத் தலைவர் உறுதிப் படுத்த வேண்டும்.

5.2 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணை யாளர் நாயகம், அமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு 2007, யூன் 25 ஆந் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை வெளிநாட்டுச் சேவை, அரச முகாமை உதவியாளர் சேவையின் தேர்வுக் கான பரீட்சை" என எழுதப்படல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். இக்கட்டணம் எந்தவொரு தபால் நிலையத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 என்ற கணக்கிற்குச் செலுத்தப்பட்டு பெறும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தொகை மற்றும் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம் என்பன குறிப்பிடப்பட வேண்டும்.) பரீட்சைக்கான கட்டணம் வேறு விதிகளில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டோ அல்லது தபால்/காசோலை களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, பற்றுச்சீட்டின் படப்பிரதி

ஒன்றை வைத்திருத்தல் சாலச் சிறந்தது. பரீட்சைக் கட்டணத்தை மீளப் பெற முடியாது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

8.1 விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற வரிசையில் விண்ணப்பதாரர்கள் எழுத்துமுறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

8.2 பரீட்சைக்குத் தோற்றத் தகுதிபெற்ற அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு உறுதி செய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்.

8.3 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எழுத வேண்டும். பரீட்சார்த்தி தான் பரீட்சை எழுதும் முதல் நாளன்று தனது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டையை பரீட்சை எழுதும் முதல் நாள் அன்று பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்னும் நியதிகள் இவ்வர்த்தமானியின் முன் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

9. **பரீட்சை மொழி**.- பரீட்சை சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

9.1 ஒரு பரீட்சார்த்தி ஆங்கில வினாத்தாளைத் தவிர்த்து மற்றைய எல்லாப் பாடங்களையும் ஒரே மொழியிலேயே எழுத வேண்டும். (அதாவது சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில்) இரு மொழிகளில் எழுதுவது தடை செய்யப்பட்டுள்ளது.

10. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :**

10.1 பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது, பரீட்சைக்கு முன்போ பரீட்சை நடக்கும்பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

10.2 பரீட்சார்த்தி கொடுத்துள்ள தகவல்கள் ஏதாவது அவர் அறிந்தவரை உண்மையற்றதெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே உண்மைத் தகவல்களை மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையில் இருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

11. **பரீட்சார்த்தியின் அடையாள அத்தாட்சி :**

11.1 ஒரு பரீட்சார்த்தி தனது பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது அடையாளத்தை நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். அதற்கமைய கீழே தரப்படும் ஏதாவதொரு அடையாளச் சான்று போதுமானதாகும்.

11.2 ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

11.3 அஞ்சல் அதிபதியினால் அண்மையில் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை.

11.4 பரீட்சைத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

பாலித ரீ. பி. கொஹொன,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம்",
த. பெ. இல. 583,
கொழும்பு 1,
2007.04.11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

*இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை*

***பகுதி அ***

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சார்த்தி பரீட்சை எழுத விரும்பும் மொழி :
சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E
(உரிய குறியீட்டை இடவும்).

1. பெயர் :-----.

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : MR./MRS./MISS. :-----.

உதாரணம் : Mr. Silva, M. A.

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

(அனுமதி அட்டைகள் இவ்விலாசத்திற்கு அனுப்பி வைக்கப் படும்.)

2.1 நிரந்தர முகவரி :-----.

(சிங்களத்தில்/ தமிழில்)

தொலைபேசி இல. :-----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

தொலைபேசி இல. :-----.

3\. 3.1 தேசிய இனம் :-----.

பால் :

பெண்-F/ஆண்-M (உரிய எழுத்தைக் குறிப்பிடுக.)

3.2 பிறந்த திகதி :-----.

ஆண்டு : மாதம் : திகதி :

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-----.

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4\. சேவை (அரச முகாமை உதவியாளர் சேவை/ மாகாண சபை அரச முகாமை உதவியாளர் சேவை/ உள்ளூராட்சி அரச முகாமை உதவியாளர் சேவை) (அவசியமற்றவற்றை கீறிவிடவும்) :-

4.1 முதல் நியமனத் திகதி (அரசாங்க சேவை/ மாகாண சபை சேவை/உள்ளூராட்சி அரச சேவை) (அவசியமற்றவற்றை கீறிவிடவும்) :-----.

சேவையில் சேர்ந்த மொழி :-----.

5\. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :-----.

(திருமணமானவராயின் M எழுத்தையும், திருமணமாகாதவராயின் S எழுத்தையும்) உரிய எழுத்தைக் குறியிடுக :-

5.1 திருமணமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கை, பிறந்த திகதி, அவர்களின் வயது என்பன :-----.

6\. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் விபரம் தரவும் (அரச சேவையாயின் முழு விபரம் தரவும்) :-----.

7\. கல்வித் தகைமைகள் (மொழிமூல விபரத்துடன்) :-----.

8\. உயர்வுபெற்ற திகதி :-----.

8.1 வகுப்பு II :-----.

8.2 வகுப்பு I :-----.

8.3 விண்ணப்பதாரர் தற்பொழுது சேவையில் இருக்கும் வகுப்பு மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதியும் :-----.

9\. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

10\. அனுபவ அறிவு (வருடங்கள் குறிப்பிடுக) :-----.

10.1 கணக்கீடு :-----.

10.2 தாபன விதிமுறைகள் :-----.

11\. மொழித் தேர்ச்சி :-

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| (அ) சிங்கள மொழி | | | |
| (ஆ) தமிழ் மொழி | | | |
| (இ) ஆங்கில மொழி | | | |
| (ஈ) வேறு பிறநாட்டு மொழி | | | |

12\. திறமை :-----.

12.1 தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :-----.

12.2 கணனி பாவனை (விபரம் தரவும்) :-----.

13\. விண்ணப்பதாரர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் முன்னர் சேவையாற்றியிருந்தால் தூதரகத்தின் பெயரும் திகதிகளும் குறிப்பிடுக :-----.

14\. ஏனைய தகைமைகள் :

**குறிப்பு**.- தபாலகத்தில் பணம் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்படல் வேண்டும்.

1. பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
2. தபால் நிலையம் :-----.
3. திகதி :-----.
4. தொகை :-----.

15\. விண்ணப்பதாரரின் உறுதியுரை.- 2007.06.25 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களும் பெற்றுள்ளேன் என்றும் (எச்சரிக்கை தவிர்ந்த) எதுவித ஒழுக்காற்று தண்டனையையும் பெறவில்லை என்றும் இத்தால் உறுதிமொழிகின்றேன். அத்துடன் எனது அறிவுக்கெட்டிய வரையில் இவ்விண்ணப் பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

..............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**பகுதி- ஆ**

**(திணைக்களத் தலைவரால் நிரப்பப்பட வேண்டும்)**

வகுப்பு I/வகுப்பு II ஐக் கொண்ட அரச முகாமை உதவியாளர் சேவை, மாகாண சபை அரச முகாமை உதவியாளர் சேவை/ உள்ளூராட்சி அரச முகாமை உதவியாளர் சேவை/இல் உள்ள திரு./திருமதி/செல்வி ............................................ என்பவர்,

(அ) ........................... ஆந் திகதிக்கு முன்னுள்ள 5 வருடங்களில் தனது சம்பள உயர்வுகள் அனைத்தையும் பெற்றுள்ளார் என்பதையும் ;

(ஆ) 2007.06.25 ஆந் திகதிக்கு முந்திய 5 வருட காலப்பகுதியில் எத்தகைய ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் ஆளாக வில்லை என்பதையும் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதை விசாரித்து அறிந்து கொண்டேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

**சிபாரிசு செய்தல் :**

(i) விண்ணப்பதாரர் வெளிநாட்டு தூதரகங்களில் சேவை செய்வதற்குரிய தகைமை ;

(ii) விண்ணப்பதாரர் தெரிவாகுமிடத்து அவரைத் தற்போதைய சேவையிலிருந்து தவறாது விடுவிக்க முடியுமா என்பது ;

.....................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

5-446/2

---

## அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2006

அரசாங்க சேவையில் கனிஷ்ட ஊழியர்களை அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2007, செத்தெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. மத்திய அரசு சேவையைச் சார்ந்த கனிஷ்ட ஊழியர்களுக்காக இப்பரீட்சை பின் குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வருமாறு குறிப்பிடப் படுகின்றன. போதியளவு பரீட்சார்த்திகள் தோற்றாதவிடத்து அல்லது ஏனைய காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச் செய்யுமிடத்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி பரீட்சை நிலையம் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்ததாகும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனறாகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இச்சட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவதற்கு நேரிடும்.

4. **பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய மொழிமூலம்.**- பரீட்சார்த்திகள் தமது விருப்புப்படி ஒரு மொழி மூலத்தில் மட்டுமே இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முடியும்.

5. **சம்பளம்.**- 2006.04.25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி அரச முகாமை உதவியாளர் சேவையில் III, II மற்றும் I ஆகிய வகுப்புகளுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 13,640-10x120-11x140-6x210-14x290-21,700 ஆகும். ரூ. 14,840 ஐ கடந்து செல்வதற்காக வகுப்பு II இற்கும் ரூ. 16,380 ஐ கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கும் தரமுயர்வுகளைப் பெறுதல் வேண்டும்.

**குறிப்பு**.- நியமனம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைப் படுத்தப்படும் சம்பள அதிகரிப்பு சட்டதிட்டங்களுக்கு அமைய, அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு நலன்களும் வழங்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்.**- (i) இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்கு நியமனத் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றும் அடிப்படையின்கீழ் நியமனங்கள் வழங்கப்படும். அவர்களின் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த பின்னர் சேவையில் நிரந்தரப்படுத்தப்படும்.

(ii) இப்பரீட்சை பெறுபேறுகளின் பேரில் நியமனம் பெறும் பரீட்சார்த்திகள் இடமாற்றங்களுக்கும் இத்தீவின் எப்பகுதி யிலேனும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

7. **நியமனத்தின் பொருட்டு தெரிவுசெய்யும் முறை.**- மத்திய அரசின் வெற்றிடங்களுக்காக மத்திய அரச சேவையிலுள்ள கனிஷ்ட

ஊழியர்கள் மட்டும் போட்டிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதுடன், போட்டிப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்களுக்கான தெரிவுகள் செய்யப்படும்.

*8. **தகைமைகள்**.-* இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :

(i) 2006.04.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன்படி பீஎல்-1-2006, பீஎல்-2-2006 மற்றும் பீஎல்-3-2006 என்னும் சம்பள குறிகளின் கீழ்வரும் சம்பள அளவுத் திட்டத்தை கொண்டுள்ளதும் நிரந்தர பதவியை வகிக்கும் மத்திய அரச சேவையின் கனிஷ்ட ஊழியராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தியிருத்தலும் வேண்டும். (தாபன விதிக்கோவையின் அத்தியாயம் I இல் கூறப்பட்ட வரைவிலக்கணத்துக்குள் அடங்கும் அரசாங்க உத்தியோ கத்தராக இருத்தல் வேண்டும்.)

(ii) 2006.12.31 ஆந் திகதிக்கு உடன் முன்னராக நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலப் பகுதி தொடர்ச்சியாகவும், முனைப்பாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன் அதனைப் பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்திகள் கல்விப் பொதுத் தராதர (சா./த.) பரீட்சையில் மொழி/ இலக்கியம் என்பவற்றுடன் எண்கணிதம்/ தூயகணிதம்/ ஆரம்ப கணிதம்/ வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

***குறிப்பு**.- (1)* ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தர நியமனம் செய்வதற்கு முன்னராக சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்காக நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டு காலவெல்லையாக கணக்கிலிடப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/அமைய அடிப்படையில் சேவாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான 05 ஆண்டு கால எல்லைக்காக கணக்கிலிடப்படமாட்டாது.

2. அரசாங்க சேவையிலுள்ள மோட்டார் வாகனச் சாரதியாளர்கள் ஏனைய தகைமைகளைக் கொண்டிருப்பின் அவர்களின் சம்பள முறையைப் பற்றி கவனத்தில் கொள்ளாது இப்பரீட்சைக்கு தோற்றலாம்.

3. மேலே (ii) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறான ஐந்தாண்டு (05) திருப்திகர சேவை பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் இப்பரீட்சையின் செயற்பாடுகளுக்காக திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள வர்கள் எனக் கருதப்படுவர்.

(அ) 2006.12.31 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து ஆண்டுகளில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) 2006.12.31 ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து ஆண்டுகளில் ஒழுக்காற்று தண்டனைகள் எதற்கும் ஆளாகாது இருத்தல் வேண்டும்.

4. நியமனத்தின் பொருட்டு உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படு மிடத்து திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

5. பகுதி தொழில்நுட்பச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களோ அல்லது ஏதேனுமொரு செயற்பாட்டிற்காக பயிற்றப்பட்டவர்களோ அல்லது அரசினால் விசேட முறையில் பயற்சியளிக்கப்பட்ட எந்தத் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர். உதாரணமாக : பொறியியல் மற்றும் தொழிற்சாலைத் தரங்களிலுள்ள ஊழியர்களும், சுகாதார திணைக் களத்தில் மருத்துவச்சிகளும் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்களாவர். எவரேனுமொரு ஊழியர் தகைமையுடையவரா அல்லது தகைமையற்றவரா என்பதில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் பரீட்சார்த்தி அவரின் திணைக்களத்தில் விசாரிக்க வேண்டு மென்பதுடன் குறித்த திணைக்களம் அது தொடர்பில் "அரசாங்க நிர்வாக அமைச்சு"டன் தொடர்புகொள்ள வேண்டும்.

இப்பரீட்சைக்காக தோற்றவுள்ள ஊழியரின் தகைமை பற்றி அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சை உசாவும் வேளையில் சம்பந்தப்பட்ட திணைக்களம சம்பள அளவுத் திட்டம் சகிதம் ஊழியரின் தொழில் தொடர்பான முன்னைய விபரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அத்தொழிலைச் செய்வதற்கு வேண்டிய ஏதாவது பயிற்சி அளிக்கப்பட்டதா என்பதனையும் அந்தப் பயிற்சிக்கான கால எல்லை, அதன் தன்மை என்பவற்றையும் குறிப்பிட வேண்டும்.

6. அரசாங்க சேவையின் தற்காலிக, அமைய ஊழியர்கள் சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளின் ஊழியர்கள், இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவர்களாவர்.

7. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தாம் திருப்தியுறும் வகையில் இதில் விதிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இவ் அறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாமல் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையில் போதிய அளவு புள்ளிகளை அடைந்திருந்தாலும், நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

8. அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த இணைந்த சேவை, கனிஷ்ட ஊழியர்களைத் தவிர்ந்த திணைக்களத்தின் வேறு எந்த ஊழியர்களும் பரீட்சைக்கு தோற்ற தகுதியற்றவராவார்கள்.

*9. **விண்ணப்பங்கள்**.-* (i) இப்பரீட்சைக்கு உட்சேர்வதற்கான மாதிரி விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஏ4 அளவிலான ஒரு முழுத்தாளைப் பயன்படுத்தி 1 முதல் 3 வரை 1 ஆம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவாகும். இப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 என்ற வருமானத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்துவதற்கு முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்விட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் பரீட்சார்த்திகளின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்பட்டு 2007.06.26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சென்றடையுமாறு இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

(iv) இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவத்தைத் தயார் செய்துகொள்ள வேண்டும் எனவும் விண்ணப்ப தாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையோ அல்லது முற்பிரதியையோ அனுப்பலாகாது எனவும் அறியத் தருகின்றேன்.

10. விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாறான ஒரு சான்றிதழ் திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். இந்த நடைமுறைக்கு இணங்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். 2007.06.26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தினை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

11. பரீட்சை ஆணையாளர் நாயகம் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசியின் பிரதி ஒன்றுடன் அனுமதி அட்டையையும் அனுப்புவார். அத்துடன் அவ்விபரங்கள் தொடர்பான அறிவித்தல் ஒன்றும் "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப் படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வை யாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பிரவேச அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான பிரவேச அட்டைகளை காட்டத்தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். எவரேனும் அலுவலர் ஒருவருக்கு பரீட்சை திகதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னராவது பிரவேச அட்டை கிடைக்காவிடின், பிரவேச அட்டை கிடைக்காமை பற்றி பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (*தந்தி முகவரி*- 'பரீட்சை', பத்தரமுல்ல).

அவ்வாறு அறிவிக்கும்போது பின்குறிப்பிடப்படும் விபரங்களைக் கொடுத்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) முழு முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், அனுப்பிய திகதி ;
(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ;
(vi) விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி.

12. பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளித்தல் தகவுத் திறமையை ஏற்றுக்கொண்டதென அமையாது. பின்னர் ஒரு கட்டத்தில் அது நுண்ணியதாக ஆராயப்படும். இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர் எனப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் ஒரு விண்ணப்ப தாரரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது நிராகரிக்கப்படும்.

13. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்.**- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சையின் பெறுபேறுகள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

14. **ஆள் அடையாளம்.**- இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காக பின்வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டையொன்று ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டொன்று ;

15. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்களத் தலைவர்கள் கடமை லீவு அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

16. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிக கவனமாகவும் சரியாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சை சட்ட திட்டங்களின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையற்றவையென தெரியவரு மிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

17. **பரீட்சை திட்டம்.**- பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடங்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் பின்குறிப்பிடப்பட்டுள்ளன :

| பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|
| (i) பொது அறிவு | 100 | 2 மணித்தியாலங்கள் |
| (ii) உளச்சார்புப் பரீட்சை | 100 | 1 மணித்தியாலம் |
| மொத்தம் | 200 | |

*குறிப்பு.*- (i) சேவையின் கடமைகளுக்காக பரீட்சார்த்தி ஒருவரின் தகைமையையும் திறமையையும் சோதனையிடும் பொருட்டு இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ii) எல்லா எழுத்துமூல விடைத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்கும், எழுத்து பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும்.

(iii) மேற்படி ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது வீத (40%) புள்ளிகளையாவது பெறுதல் வேண்டும். திறமை ஒழுங்கு முறைப்படியும் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்பவும் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

(iv) இப்பரீட்சையின் பாடங்களுக்கு ஏற்புடையதான வினாத் தாள்களின் கட்டமைப்பு தொடர்பாக உரிய காலத்தில் அரசாங்க

நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத் தளத்தில் (web site) வெளியிடப்படும்.
(இணையத்தள முகவரி : www.pubad.gov.lk)

18. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

ஏ. நோபேட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2007, மே 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2006**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR PROMOTION OF MINOR EMPLOYEES OF THE PUBLIC SERVICE TO CLASS III OF THE PUBLIC MANAGEMENT ASSISTANTS SERVICE-2006

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப தாரர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தை குறிப்பிடவும்.)

பரீட்சார்த்தி பரீட்சை எழுத விரும்பும் மொழி :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்).
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1.
1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) உதா. Silva. A. B.
1.2 முழுப் பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
1.3 முழுப் பெயர் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)

2. சேவை நிலையமும் முகவரியும் :-
2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)
2.3 பிரவேச அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

3.
3.1 பால் : பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
3.2 பிறந்த திகதி :-
ஆண்டு : மாதம் : திகதி :
3.3 தேசிய அடையாள அட்டை இல. :

4. சேவை விபரங்கள் :
4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் :----.
4.2 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.
4.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
4.4 தற்போதைய பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா ? : ----.
4.5 தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? : ----.
4.6 உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், உறுதிப்படுத்தப்படுவதற்கு நீங்கள் தகைமையடைந்த திகதி :----.
4.7 தற்போதைய பதவியில் நீங்கள் உறுதிப்படுத்தப்பட்டது தொடர்பான கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.
4.8 தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய) :----.
4.9 தற்போதைய பதவி இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதா ? :----.

5. பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :----.
(i) பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

(பற்றுச்சீட்டை கழராதவாறு இவ்விடத்தில் ஒட்டிவிடவும்)

இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை யென உறுதிமொழிகின்றேன். இதனகத்துத் தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால் அச்செம்மையின்மை நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கம் செய்யப் படுவதற்கும் நியமிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும், அறிவேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்
(திணைக்களத் தலைவரின் முன்னிலையில் கையொப்பம் இடப்படல் வேண்டும்.)

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரான திரு./திருமதி/செல்வி -------- ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் -------- இன்றைய திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

--------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

(1) திரு./ திருமதி/ செல்வி -------- இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும் ;

(2) அவர் நிரந்தரமான பதவியொன்றினை வகிக்கின்றாரெனவும் ;

(3) 2006.12.31 ஆந் திகதியன்று அவர் நிரந்தரமான பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரெனவும் ;

(4) நிரந்தரப் பதவியொன்றில் இவரை உறுதிப்படுத்தும் கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் ;

(5) அவர் 2006.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையினை பூர்த்திசெய்துள்ளாரெனவும் ;

(6) அவர் குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 8 பந்தியில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அடங்கும் வேதனத்தைப் பெறுகின்றாரெனவும் அல்லது வேதன திட்டத்தில் உள்ளாரெனவும் ;

(7) 2006.12.31 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 5 ஆண்டு காலத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்ததெனவும் ;

(8) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப் படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும் ;

(9) ரூபா 250 பெறுமதியான ஒரு பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;

(10) அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளனவெனவும் இப்பரீட்சை சம்பந்தமான வர்த்தமானி அறிவிப்பில் காணப்படும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

--------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*குறிப்பு*.- (i) இச்சான்றிதழில், திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட முறையாக அதிகாரம்பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே கையொப்பமிடுதல் வேண்டும். சான்றிதழை அளிக்கும் உத்தியோகத்தர் சான்றிதழில் தரப்பட்டுள்ள விபரங்கள் எல்லாவகையிலும் சரியானவையெனத் திருப்தியடைதல் வேண்டும்.

(ii) தகைமைகள் பற்றிய எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்யாத எப்பரீட்சார்த்தியினதும் விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படலாகாது.

5-431

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.